IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சோ.தர்மனின் கூகை புதினத்தில் உத்திமுறைகள்

*இரா.ராஜேஷ் குமார்
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன்இணைவு பெற்றது)
கரூர்-5

நெறியாளர்
**முனைவர் எ. கற்பகம்
இணைப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கரூர்-5
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

**முன்னுரை**

உலகில் தோன்றும் அனைத்து உயிரினங்களும் தனித்திறமை பெற்றே விளங்குகின்றன. இதில் தன்னிடமுள்ள தனித்திறனை வெளிப்படுத்துவதில் மனிதனே முன்னோடியாக விளங்குகிறான். சிந்தித்துச் செயல்படுவதில் சிறந்தவனான மனிதன் தன் சிந்தனைகளைப் பலவாறு வெளிப்படுத்துகிறான். ஒரு கவிஞனின் சிந்தனைத் திறனின் வெளிப்படுதான் கவிதை ஓர் எழுத்தாளனின் கற்பனைத் திறன்தான் கதைகள். நாடகங்கள், கட்டுரைகள், புதினங்கள் ஆகும் ஒரு கதையின் உள்ளடக்கப் பொருளுக்கு அஞ்சி நோக்க வேண்டியவை கதையின் உத்தியும், மொழிநடையும் அமைகிறது. உத்தியினால் ஒரு கதை சிறப்பு நிலையடையும். படைப்பாளர் சோ.தர்மன் பல உத்தி முறைகளைக் கொண்டு புதினம் படைத்துள்ளார். அதனால் அவரின் கூகை என்ற புதினத்தில் காணலாகும் உத்திமுறைகளை எடுத்துக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**உத்தி - விளக்கம்**

படைப்பாளன் தன் படைப்பின் வழியே வெளிக்காட்டும் நுண்ணிய அணுகுமுறையை உத்தி எனலாம் பொதுவாகப் படைப்பாளன் தான் கூறவந்த செய்தியான உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் முறையே உத்தி எனலாம் என்கிறார் டாக்டர் ந. பிச்சமுத்து.(திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், ப-4)

பாரதியார். தாம் கவிதையில் சொல்ல முடியாத சில செய்திகளை வசன கவிதை வடிவத்திலும், சிந்து, கண்ணி, போன்றவை கூறுவது கூட ஒருவகை உத்தி தான் என்கிறார் அவர்.

படைப்பாளன் தான் சொல்ல வந்த கருத்துக்களைக் கற்பவர் மனத்தில் எளிதில் பதியச் செய்யவும் விளங்க வைக்கவும் கையாளும் முறைகள் உத்தியாகும் என்று செ சாரதாம்பாள்(செவ்வியல்,ப-71) கூறியுள்ளார்.

"ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின் நுதலிய தறிதல் முறையே தொகுத்துக்கூறல் வகுத்து மெய்ந்தளித்தல் மொழிந்த பொருளோ டொன்ற வைத்தல்"(தொல்காப்பிய நூற்பா, எண்–656) எனத் தொல்காப்பியர் உத்தியின் அணுகு முறையைக் கூறியுள்ளார். மேற்குறிப்பிட்ட விளக்கங்களின் அடிப்படையில் சோ.தர்மன் புதின இலக்கிய உத்திகள் வரையறுக்கப்படுகின்றது.

**உத்தி வகைகள்**

எல்லா இலக்கியங்களுக்கும் பொதுவானவை எனவும் குறிப்பிட்ட இலக்கியங்களுக்கு மட்டும் உரியவை என்றும் அமையும் உத்திகள் பல வகைப் பிரிவுகளில் அடங்குகின்றன. புறநோக்கு நிலை. உள்நோக்கு நிலை, தலைப்பினால் கதையை உணர்த்தும் உத்தி, கதையை நடுவில் தொடங்கும் உத்தி. மொழிநடை உததி, வட்டார வழக்கு. உரையாடல் உத்தி, என்னல் உத்தி, பின்னோக்கு உத்தி, நனவோடை உத்தி, குறியீட்டு உத்தி, பழங்கதைக் கூறுகளைப் பயன்படுத்தும் உத்தி, இலக்கியங்களைப் பயன்படுத்தும் உத்தி, கடித உத்தி, களவு உத்தி, கற்பனை நிகழ்வியல், கதைக்குள கதை, காட்சிப்படுத்துதல், வருணனை போன்ற உத்திகள் இடம் பெறுகின்றன.

**உத்தியும் இலக்கியமும்**

ஓர் இலக்கியப் படைப்பு அடிப்படையானக் கருத்தைத் தாங்கி நிற்பதிலேயே அதன் கட்டமைப்புத் நிகழும் எனினும் அக்கருத்து சுவைப்படக் கூறும் முறையினால் தான் வாசகர் அதனைத் தெளிவாகவும், ஆழ்ந்தும் உணர முடியும் ஒரு கருத்தைச் சுவைப்பட கூற வேண்டுமாயின் தகுந்த உத்திகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதை இராமலிங்களார்.

"கலைஞன் தான் வழங்கும் பொருளைவிட வழங்கும் முறையில் ஆர்வம் காட்டவேண்டும் உத்தியைப் பற்றிய வேட்கையும் வடிவத்தின் மீது ஆர்வமும் இருக்க வேண்டும்" என்று எடுத்துரைக்கிறார்(நாவல் இலக்கியம்- ப.147)

**நோக்குநிலை உத்தி**

கதை கூறும் உத்தியில் நோக்குநிலை சிறப்பிடம் பெறுகிறது. கதைக்கூறுவேர் எந்த கோணத்திலிருந்து தம் கதையைச் சொல்கிறார் என்பதைக் காட்டுவதே நோக்குநிலை அதாவது புதினத்தில் கதை யாரால் கூறப்படுகிறது என்பதைத் தான் நோக்கு நிலை அல்லது கதை கூறும் கோணம் என்றழைக்கப்படுகிறது. புதினம் இயற்றும் ஆசிரியர் அப்புதினத்தில் தான் கூற எடுத்துக்கொள்ளும் கருத்தை விட அவசியமானது அவர் கதையைச் சொல்லும் முறையே ஆகும் ஆசிரியர் கதைச் சொல்லும் முறையிலேயே அந்தாவல் சிறப்பிடம் பெறுகிறது

இக்கதை கூறும் உத்தி கதை இலக்கியத்தின் வெற்றிக்கு இன்றியமையாத கூறாகும். ஒரு கதையில் இடம் பெறும் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி காலமுறைப்படி கூறிவருவது கதையாகிவிட முடியாது. அது கதையைப் போல காணப்பட்டாலும், கதை இலக்கியத்திற்குரிய கலைத்தன்மையோடு பொருந்திவராது, படிப்பவரின் ஆர்வத்தைத் தூண்ட முடியாது அது பற்றியே புதினத்தில் கதைக் கூறுவதற்கு ஆசிரியர் பயன்படுத்தும் உத்தி மிகச் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. கதையை யார் வழியாகக் கூறுவது என்பதில் ஆசிரியனுக்கு முழுச் சுதந்திரம் உண்டு, ஆசிரியர் வழியாகவோ, தலைமை மாந்தர் அல்லது சிறு பாத்திரத்தின் கோணத்திலோ, கதை மாந்தர்களே தம்முன் மாறி மாறியோ கதை கூறுவதாக அமைக்கலாம்.

சரி, இப்ப கூகை இந்த மரத்துல இருக்கிற விஷயம் மத்த பறவைகளுக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டேன். பகவானோட படைப்புல எத்தனையோ இருக்கு, அது மாதிரி நமக்குத் தெரியாத விஷயம் மத்த பறவைகளுக்குத் தெரியும் போல என்றார். கூகை பற்றிய விஷயங்கள் எனக்கு ஆச்சர்யமாகவே இருந்தன. அப்புறம் நான் பல தடவை பல்வேறு தருணங்களில் கூகையைப் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு தடவை கூகையைப் பார்க்கும் போதும், நானும் ஒரு கூகை என்பதையும், என் கண்ணுக்குப் புலப்படாத ஆனால் எல்லோர் கண்களுக்கும் புலப்படும் ஆயிரமாயிரம் ஆண்டு களாய் அழிக்க முடியாத ஒரு அடையாளத்தை நான் சுமந்து திரிகிறேன் என்பதையும் உணர்கிறேன். இரவுப் பறவையான கூகைகளின் வாழ்வில் இரவுப் பொழுதுகளே முக்கிய நிகழ்வுகள், சந்தோஷங்கள், சோகங்கள் நிகழும் நேரங்களாகும். கூகை' புதினத்தில் இரவு என்பதை மையப்படுத்தியே முக்கிய நிகழ்வுகள் சாத்தியமாகும். கூகை தெய்வமாகவும் சீனுவின் கதாபத்திரம் மையமாவும் கதையை நகர்துகின்றார்.

காலவெளியில் ஒரு சமூகம் தன்னைத் தானே எப்படி கடந்து போகிறது என்பதைக் காட்சிப்படுத்த, மற்ற எந்த வடிவத்தை விடவும் நாவல் வடிவமே மிகவும் சரியான வடிவம் என்று கருதுகிறர்.

**மொழிநடைஉத்தி**

இலக்கியக் கூறுக்கு இன்றியமையாதது மொழி அம்மொழியின் தன்மையறிந்து ஒவ்வொரு படைப்பையும் நடையழகு மிளிரப் வேண்டியது எழுத்தாளனின் கடமை. நடை என்பது வெறும் சொற்களின் கோர்வையாக இல்லாமல் படைப்பாளனின் அறிவுக் கூர்மையையும், ஆளுமையையும் வெளிப்படுத்தி நிற்கும் தன்மையுடையது மொழிநடையே எழுத்தாளரை அடையாளம் காட்டி நிற்கும் முகவரியாகிறது.

உள்ளதை உள்ளவாறு படைத்துக் காட்டும் புதினத்திற்கு சில நுட்பங்களைச் சேர்ப்பது அக்கதைக்கு மேலும் சிறப்பு சேர்க்கின்றது. படைப்பாளர் தான் பெற்ற உணர்ச்சிகளை, அனுபவங்களை அப்படியே வாசகன் பெறும் பொருட்டு சில உத்திகளைக் கையாளுகிறார். அவ்வகையில் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ள மொழிநடையையும் ஓர் உத்தியாகப் பயன்படுத்துகிறார். "நடை என்பது மனிதனின் ஆளுமையை உணர்வதும் உணர்த்துவமாகிய செயற்பாங்கின் ஊடகமே அதாவது ஒருகுறிப்பிட்ட முறையில் தேர்ந்தெடுத்து ஒழுங்குபடுத்தி அமைக்கப்பட்ட சொற்களின் கோவையே மொழி" (விடுதலைக்கு முன் சிறுகதைகள்,ப-163) என்று சொற்களின் கோவையே மொழிநடை நடைக்கு மா. இராமலிங்கம் விளக்கம் தருகிறார்.

எல்லாப் பயகளும் சிரிக்கிகளும் எங்கல போய்ட்டு வாரீக.

கேக்கோம்ல வாயில என்னல... யவா வச்சிருக்கீக.

ஐயர்வீட்டுக்கு'

ஐயர் வீட்ல எல்லாத்துக்கும் என்னல சோலி?

வாய்ட்டுக் கேட்டாச் சொல்லமாட்டீக.'

ஐயர் எல்லாத்துக்கும் வயக்காடு தாரம்னாரு. (கூகை,ப-35)

விடியக் கருக்கல்லயே தாக்கல் தெரிஞ்சிருந்தாப் போவாகளா, இப்பத்தான சொல்றீக, ஒரு வீச்ல பயகளச் சத்தங்காட்டி வரச்சொல்லிரன்.'

இப்பக் கொஞ்ச நேரத்துக்குள்ள பள்ளக்குடி பூராவும் துட்டி வீட்டு முன்னால் வந்து நிக்கல, முதுகுத் தொலி முக்காத்துட்டுப்பெறாது.

நீங்க போங்க சாமி ஒங்கப் பின்னாலயே வந்து நிக்கோம். (கூகை,ப-22)

கும்புடுறஞ்சாமியோவ்.

என்ன... சம்முவம் காலாங்காத்தால இங்கிட்டு.'

ஓங்களத்தான் பாக்க வரனும்னு வந்தன்.'

அப்பிடி என்னதலபோற காரியம் விடியக் கருக்கல்ல.

நம்ம பொண்ணு வெள்ளையம்மாளுக்கு இன்னக்சி கல்யாணம். (கூகை,ப-53)

சீனி பவ்யமாகக் கும்பிட்டபடி நின்றான். யாரோ ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான்.

எந்தூர்ல நிய்யி?

சாமி, சித்திரம்பட்டிச்சீனிக்குடும்பன்.'

என்ன வெசயம்ல''எசமான் வரச் சொன்னதா உத்தரவு கெடச்சது'

அப்பிடியா, அப்ப இப்பிடி ஓரமா நில்லு. போயி தாக்கல் சொல்லிட்டு வாரன். (கூகை,ப-66)

பழமொழிகள்

கைக்கு எட்டனது வாய்க்கு எட்டல (கூகை, ப-2)

ஆனைக்கு ஒரு காலம் வந்தா பூனைக்கும் ஒரு காலம் வராதா?(கூகை,ப-12)

அழுகல் பழம் தின்னுமா கிளி ? (கூகை,ப-27)

உப்பு தின்னாச்சு தண்ணி குடிச்சு தான் ஆகணும் (கூகை,ப-73)

கைக்கு எட்டுனது வாய்க்கு எட்டாமப் போயிருச்சு (கூகை,ப-100)

எலும்பு இல்லாத நாக்கு எங்கிட்டும் பேசும் (கூகை,ப-155)

வழியில் போற சனியனை எதுக்கு விலை கொடுத்து வாங்கணும் (கூகை,ப-148)

பின்னோக்கு அல்லது நினைவுப்பாதை உத்தி

புதின இலக்கியங்களில் ஏறக்குறைய அனைத்துப் படைப்பாளரும் பயன்படுத்தும் உத்தி இதுவாகும். முன்பு நிகழ்த்தும் நிகழ்வுகளை எண்ணிப் பார்ப்பதே இவ்வுத்தியாகும்.

சம்பவத் தகவல்களால் கதைப்பின்னல் வளராமல் எண்ணங்கள். நினைவுகள், சுருத்துகள், உணர்ச்சிகள் இவற்றில் கதை உணர்த்துவதுதான் படைப்பாளர் நினைவுப்பாதை அல்லது பின்னோக்கு உத்தி (இலக்கியச் சுவை,ப-279) என்று சி.சு. செல்லப்பா உரைக்கிறார்.

பேச்சி எப்போது உறங்கினால் என்று தெரியவில்லை கால்களை சுற்றும் நீர் பாசிகளைப் போல் பழைய நினைவுகள் ஒவ்வொன்றாக வந்து அவளை அழைத்தனர் தான் சொந்த பந்தங்களை விட்டுவிட்டு காளி தேவருடன் ஓடி வந்தது, சுண்ணாம்பு காளவாசலில் வேலை பார்த்தது ,தேவர் தண்ணி வண்டி அடிக்க போனது அப்புறம் கொலை செய்துவிட்டு ஜெயிலுக்கு போனது தேவரை தூக்கில் போட்டது ,தான் அனாதையாய் புல்லுக்கு கட்டு சுமந்து, சீரழிந்தது, அப்புச்சிப்பனை காட்டில் சந்தித்தது ,அப்புச்சி பனையும் அய்யனாரையும் ஜாமினில் எடுத்தது, போலீஸ் சித்திரவதை செய்தது இப்படியே நினைத்துக் கொண்டு புரண்டு புரண்டு படுத்து தூங்கிப் போனால்.(கூகை,ப-261)

**காட்சிப்படுத்துதல்**

காட்சிப்படுத்துதல் என்பது விவரித்தல் என்று பொருள்படும். அது படைப்பாளன் பொருள், இடம், காலம், சூழல், நிகழ்ச்சி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றையோ, பலவற்றையோ காட்சிப்படுத்துதலைக் குறிப்பதாகும். இலக்கியக் கூறுகளில் ஒன்று வருணனை சங்க இலக்கியங்களில் தலைமை மாந்தரின் அறிமுகம், இயற்கைக் காட்சிகள், காட்சியின் பின்புலம் போன்றவை தலைவன், தலைவி தோழி போன்ற பலரின் கூற்றால் வெளிப்படும். இதைப் போன்றே புதினங்களிலும் நிகழ்ச்சிகள், மாந்தரின் தோற்றம், மனநிலை போன்றவற்றைக் காட்சிப்படுத்துதல் வாயிலாகப் பாத்திர இயல்புகளை விளக்கவும், கற்பனை வெளிப்பாட்டிற்கும் படிப்போரின் கண்முன்ளே நிகழ்வுகள் வருவதற்கும் பயன்படுத்துகின்றனர்.

தூரத்தில் காடுகளில் எங்கோ கூப்பாடு போடும் மயில் கூட்டத்தின் விகார ஒலி பலமாய் கேட்டது. பாதையோர கிடங்கில் கிடந்த கொஞ்சம் தண்ணீரில் சூரியப் பூவாய் நீர் உலுப்பிக் குளித்துக் கொண்டிருந்தன இரண்டு மைனாக்கள். வரிசைப் பனையின் தூர் ஏறிப் பனையைச் சுற்றிப் படர்ந்து மஞ்சளாய் பூத்து மணத்தன பீர்க்கங்கொடிப் பூக்கள். கூவை சாமி கோயில் ஆலமரம் தூரத்தில் குமுக்காய் தெரிந்தது. மஞ்சணத்தி செடிகள் அடர்ந்து இடிந்து கிணறு கிடந்த கிணற்றில் வாகரையில் பூவரசம் பூக்கள் பூத்துக் குலுங்கினர் ஆங்காங்கு காடுகளில் கூட்டம் கூட்டமாய் ஆடுகளும் மாடுகளும் மேகக் கூட்டங்கள் என அழைந்து கொண்டிருந்தன, (கூகை,ப- 52)

கடல் பொங்கியது… பொங்கிய கடல் கரையை உடைத்தது. புயல் ஒன்று உருவாகி அப்புச்சுப்பனைத் தூக்கிப் பொங்கிய கடலுக்குள் வீசியது. அப்புச்சுப்பன் கத்தினான் கதறினான்; கைகால்கள் ஓயும்வரை நீந்தினான். கண் எட்டும்வரை கரை தெரியவில்லை. வாய் பிளந்து, ரம்பப் பற்கள் நீட்டி விழுங்கத் துடிக்கும் சுறா மீன்கள் சுற்றிலும் பாய்ந்து வந்தன. அலை தூக்கிச் காற்றில் வீசியது. காற்றில் அந்தரத்தில் மிதந்தான் அப்புச்சுப்பன். அத்தனை நட்சத்திரங்களும் கடந்தைக் குளவிகளாய் மாறி அப்புச் சுப்பனை வட்டமிட்டன. நீண்ட இறக்கைகளை உடைய ராட்ச்சப் பறவையொன்று நொடிப் பொழுதில் பாய்ந்து வந்து தூக்கிச் சென்றது.காட்டின் வழியே பறந்து போகையில் அம்புகளாய் பறந்து வந்தன விஷம் கக்கும் கொடிய நச்சரவங்கள். நார்ப் பின்னலாய்ச் சுற்றிய அரவத்துடன் சேர்ந்தே தரையில் விழுந்தான்(கூகை,ப-134)

வருணனை

புதினத்தில் அமையும் வருணனைகள் ஆசிரியரின் கவித்துவ ஆற்றலைக் காட்டுவதாகவும் கதையோடு பொருந்தியததாகவும் கற்பவர்க்கு விருப்பமூட்டும்முறையில் அமைந்திருக்க வேண்டும். நிலம், பொழுது பொருள்கள் முதலாகவும், கதை மாந்தர்களும் வருணனையில் இடம் பெறுவதுண்டு என்பார்.மா இராமலிங்கம்(நாவல் இலக்கியம்,ப-126)

இடுப்பில் நதியை வளைத்தவன், முகத்தில் பௌர்ணமியை வைத்தவன், மேனியில் தங்கத்தை குழைத்துப் பூசியவன், ஆலிலை பறித்து வந்த அரையில் ஒட்டி அழகு பார்த்தவன், மார்பில் மலை முகடு படைக்க மறந்ததேன்? ஆண்டாளை எறிட்டுப் பார்த்த பிரம்மன் தலைவன் தான் ஏடுகள் புரட்டிப் பூர்வீகம் பார்த்தான், சங்கேதக் குறியை சரி பாரத்தன் வன தேவதை. (கூகை,ப-110)

காற்றின் சுழற்சியில் தென்னை மரம் சிரித்தது. உள்ளங்கை தட்டி ஆமணக்கு கூத்தாடியது பருத்திச் செடிகள் அத்தனையும் குத்து விளக்காய் மாறி தீபங்களாய் மின்ன பேச்சி தலை கவிழ்ந்து பெருவாய்க்கால் வழியே நடந்தாள். சதுரங்கட்டி இருந்த பாத்திகள் கால் படாமல் நழுவி ஓடின. மலைப்பாம்புகளாய் நெளிந்தன நீர் வரப்புகள். (கூகை,ப-151)

குறியீட்டு உத்தி

படைப்பாளன் தான் சொல்ல விரும்பும் கதையை நேரடியாக கூறாது குறியீடுகளாக உணர்த்துவதுண்டு. அவ்வாறு குறியீட்டின் மூலம் உணர்த்துவது தற் கால புதினங்களின் பெரும்பான்மையாக காணப்படுகிறது.

குகை என்கின்ற கோட்டான் இடப்பெயர்ச்சியில் ஆர்வம் இல்லாத பறவை மிகுந்த வலிமை கொண்டது எனினும் அந்த வலிமையை தன் உணவுக்காக அன்றி வேறு சமயங்களில் பெரிதும் பயன்படுத்துவதில்லை இருளில் வெளிவந்து உலவும் இயல்புடையது பகலிலே அஞ்சு ஒடுங்கி தன் பொந்துக்குள் கிடக்கும் குகையின் தோற்றத்தை அருவருப்பாக பார்ப்பதும் கோரம் என்று முத்திரை குத்துவதும் கூகையை காணுதல் ஆகியும் அதன் குரல் ஒலி கேட்பதையும் ஆபாச குணம் என்று கருதுவதும் இந்த சமூகத்தின் பாரம்பரியமகத் தொடர்ந்து வரும் பொது புத்தி கூகையை தலித்துகளுக்கான குறியீடுகள் ஆகி சமகால தலித் வாழ்க்கையை படைப்பாக உருவாக்குவது பெரும் வெற்றி காண்டுள்ளார்

முடிவுரை

ஒரு மனிதன் தன்னிடம் இருக்கும் திறமைகளை வெளிப்படுத்தும் போது அவரின் வெளிப்பாட்டுத் திறன் வெளியாகிறது. உத்தியின் மூலம் ஆசிரியரின் தனித்திறனை அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள்**

*சோ.தர்மன் -கூகை

*டாக்டர் ந. பிச்சமுத்து-திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும்

*செ சாரதாம்பாள்-செவ்வியல்

*இராமலிங்களார்-நாவல் இலக்கியம்

*இராமலிங்கம் விடுதலைக்கு முன் சிறுகதைகள்

*சி.சு.செல்லப்பா-இலக்கியச் சுவை